සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

# ZOOM

இரண்டாம் தவணைக்கான அலகுப் பரீட்சை - 2021 மே
Second Term Unit Examination - 2021 May

தரம் 08

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය
தமிழ் மொழியும் இலக்கியமும்
Tamil Language and Literature

ஆசிரியர்
ஏ.கஜன் B.A in Tamil

45 நிமிடங்கள் Minutes

**அலகுகள்: பசிப்பிணி மருந்து, ஆக்கிமீடீசு, நாடகமே உலகம்**

மாணவர் பெயர் ..........................................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **பகுதி பகுதி I, பகுதி II** என **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
- அறிவுறுத்தல்களுக்கு அமைவாக **அனைத்து வினாக்களுக்கும்** விடையளிக்குக.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

பகுதி I மொத்தப் புள்ளிகள்

பகுதி II மொத்தப் புள்ளிகள்

இறுதிப் புள்ளிகள் 100

## பகுதி / Part - I

**1 – 10 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

**1.** பால் காட்டும் முற்று விகுதிகளைக் கொண்ட வினைகள் அழைக்கப்படுவது.
(1) எச்சவினை (2) குறிப்பு வினை (3) வினைமுற்று (4) வினையெச்சம்

**2.** ''அழுத பிள்ளை பால் குடித்தது'' - இங்கு **அழுத பிள்ளை** என்பது.
(1) ஏவல் வினை (2) எச்ச வினை (3) வினையெச்சம் (4) குறிப்பு வினை

**3.** **வேட்கை** – என்பதன் ஒத்தபொருள்.
(1) ஆவேசம் (2) உணர்வு (3) விருப்பம் (4) மருட்கை

**4.** பின்வருவனவற்றுள் பெயரெச்சமாக அமைந்த சொல்.
(1) உண்டான் (2) படிப்போம் (3) வந்த (4) பாடி

**5.** தற்காலத் தமிழில் பெரும்பாண்மையாக 'அட்டும்' என்ற விகுதியை ஏற்றுவரவல்ல வினை.
(1) ஏவல் வினை (2) முற்றுவினை (3) வியங்கோள் வினை (4) எச்ச வினை

**6.** **தமர்** - என்பதன் எதிர்ப்பொருள்.
(1) விருத்தர் (2) உற்றார் (3) நண்பர் (4) பிறர்

**7.** பின்வருவனவற்றுள் எச்ச வினையாகவும், முற்று வினையாகவும் வரத்தக்க சொல்.
(1) வந்தான் (2) வந்து (3) கூவும் (4) விழுந்து

**8.** 'இராமன் குடிமக்களுக்கு இனியன்' - இங்கு இனியன் என்பது,
(1) குறிப்பு வினை (2) தெரிநிலை வினை (3) எச்ச வினை (4) பெயரெச்சம்

**9.** பரிசனம், ஒக்கல், கிளை ஆகிய சொற்களைக் குறித்து நிற்கும் ஒரு சொல்.
(1) சோலை (2) வயல் (3) இனம் (4) அழகு

**10.** சொற்கள் ஒரு ஒழுங்கு முறைக்கேற்ப ஒன்றுடனொன்று இணைந்து முற்றுப் பொருளைத் தருதல் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) சொற்றொடர் (2) பெயர்த்தொடர்
(3) எச்சத்தொடர் (4) வாக்கியம்

**11 – 15 வரையான ஒவ்வொரு வினாக்களுக்கும் மிகப் பொருத்தமான விடையை எழுதுக.**

**11.** பசிப்பிணி பற்றி எடுத்துரைக்கும் நூல் …………………………. ஆகும்.
(1) சிலப்பதிகாரம் (2) மணிமேகலை
(3) தீவதிலகை (4) திருக்குறள்

**12.** நில், வா, எழுது என்பன …………………….. ஆகும்.
(1) ஏவல் ஒருமை (2) பெயரெச்சம் (3) வினைச்சொல் (4) வினையெச்சம்

**13.** ……………………. பசியைப் ‘பிணி’ எனக் கூறியுள்ளார்.
(1) சைராக் (2) சிந்தாதேவி (3) ஆதிரை நல்லாள் (4) சாத்தனார்

**14.** கியூஸ் நாட்டு அரசன் ……………………. ஆவான்.
(1) சாத்தனார் (2) சைராக்
(3) ஆக்கிமீடிசு (4) சேக்ஷ்பியர்

**15.** ‘இந்த உலகம் ஒரு நாடகசாலை’ என்று ……………………….. கூறியுள்ளார்.
(1) சேக்ஷ்பியர் (2) அமுதசுரபி
(3) சரோஜினி தேவியார் (4) சேர் ஐசாக் நியூட்டன்

**16 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களும் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

**16.** **அழகான மலர் -** இங்கு அழகான என்பது பெயரடைச் சொல்லாகும். (……….)

**17.** முன்னிலையில் உள்ள ஒருவரைக் கட்டளையிடும் தன்மையில் அமையும் வினை வியங்கோள் வினை எனப்படும். (……….)

**18.** ஆபுத்திரன், மதுரையில் மாசற்றவர்களின் மனைகளில் பிச்சையெடுத்தான். (……….)

**19.** ‘நீ முன்னேறுக’ என்பதில் ‘முன்னேறுக’ என்பது குறிப்பு வினையாகும். (……….)

**20.** ‘ஆக்கிமீடிசு’ என்ற பாடப்பகுதியை கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார். (……….)

**(20 X 3 = 60 புள்ளிகள்)**

## பகுதி / Part – II

**01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**
(i) தீவதிலகையின் வேட்கை யாது?
(ii) ‘தெரிநிலை வினை’ என்றால் என்ன?
(iii) ஆக்கிமீடிசு கண்டறிந்த விஞ்ஞானத் தத்துவம் என்ன?
(iv) ‘சைராக்’ மன்னனுக்கு ஏற்பட்ட சந்தேகம் யாது?
(v) ‘நாடகம்’ பற்றி சேக்ஷ்பியரின் கருத்து எத்தகையதாகும்?

**(5 X 4 =20 புள்ளிகள்)**

**02. பின்வரும் வாக்கியங்களிலிருந்து பெயர்த்தொடர், வினைத்தொடர் என்பவற்றை இனங்கண்டு எழுதுக.**
(i) கமலா விரைவாக எழுதினாள்.
(ii) பல வர்ண மீன்கள் நீரில் மிதக்கின்றன.
(iii) குமரன் மெல்லக் கதைத்தான்.
(iv) அழகிய சிறுமிகள் ஆடி மகிழ்ந்தனர்.
(v) விமலா அழகாகச் சிரித்தாள்.

**(5 X 4 =20 புள்ளிகள்)**

அகில இலங்கை ரீதியாக
தமிழ்மொழிமூல மாணவர்களை ஒன்றிணைத்து

**ONLINE CLASS**

# அரிய வாய்ப்பு!

தமிழ்வழி

# ZOOM

தரம்

# 8,9

'தமிழால் நிமிர்வோம்'

# தமிழ்



# குழு வகுப்புகள்

## Theory & paper Class

ஆசிரியர்
**ஏ. கஜன்**
B.A in Tamil

### நேர அட்டவணை

**தரம் 08**

| | |
|---|---|
| Wed | 7.30-8.30Pm |
| Sun | 8.30-9.30Pm |

**தரம் 09**

| | |
|---|---|
| Wed | 8.30-9.30Pm |
| Sun | 7.30-8.30Pm |



நேரடி வகுப்புகள்
ஆரம்பித்தாலும்
ZOOM வகுப்பு
நடைபெறும்

- இலகுவான நுட்ப கற்பித்தல் முறை.
- மிகவும் எளிய முறையில் இலக்கண விளக்கமளிப்பு.
- அலகு ரீதியான மேலதிக பயிற்சிகள்.
- மாதிரி வினாபத்திரங்களுடன் கூடிய பரீட்சைகளும் விளக்கமளிப்பும்.
- தவணைப் பரீட்சைகளும், இடைத் தவணைப் பரீட்சைகளும்.
- பாட ரீதியாக மேலதிக விளக்கங்கள்.
- தவணை நிறைவில் விசேட துரித மீட்டல் வகுப்புகள்.
- மாற்றமுறாத நேர அட்டவணையுடன் கூடிய வகுப்புகள்.
- நேரடி வகுப்புகளுக்கு ஒத்ததான இணைய வகுப்பறைக் கல்வி.
- தவணைக்குரிய பாட அலகுகளை உள்ளடக்கும் வகையிலான கையேடு.

வகுப்பில் இணைந்துகொள்ள விரும்புவோர், கீழ்வரும் வங்கிக் கணக்கு இலக்கங்களில் யாதாயினும் ஒன்றிற்கு 600/=கட்டணத்தை வைப்பிலிட்டு, பற்றுச்சீட்டின் பிரதியுடன், பெயர் மற்றும் விபரங்களை 077 2400 707 எனும் இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்.

Name: A.Kajan
Branch: Mallavi

BOC 74126254

PEOPLE'S BANK 165 200 10000 3370

மாதாந்தக் கட்டணம்
600/=

Call Now

**077 2400 707**